திரு. எம். கே. ராஜமாணிக்கம் : இந்தப் பாலமானது ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய நீளமானதொரு பாலமாக இருக்கிறது. அங்கே மின் விளக்குகள் இல்லாத காரணத்தால் காவல் துறையினர் கூட அந்தப் பாலத்தை கண்காணிக்க முடியாமல் அங்குள்ள இரும்பு போன்ற மற்ற சாமான்கள் திருடு போய்க்கொண்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இதுபோன்ற திருட்டுக்களைத் தடுக்கவும் அரசு நேரடியாகத் தலையிட்டு அங்கே உடனடியாக மின் விளக்குகள் பொருத்த ஆவனச் செய்யுமா? இந்த நீண்ட பாலமானது இருள் அடைந்து இருப்பதன் காரணமாக சில சமூக விரோதிகள் அங்கே பலவிதக் குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து காவல் துறையினரும் சரியான நடவடிக்கை எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பாலத்தில் உடனடியாக மின்விளக்குகள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சமூக விரோதச் செயல்கள் தடுக்கப்படுவதோடு மக்கள் போக்குவரத்திற்கு ஏற்றதாக இருப்பதற்காகத்தான் இந்த மின் விளக்குகள் பொருத்துவதற்குண்டான திட்டங்கள் தீட்டி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சமூக விரோதச் செயல்கள் நடைபெறாமல் பாதுகாத்துக் கொள்வதற்காக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு எவ்வளவு சீக்கிரம் அந்த மின் விளக்குகளைப் பொருத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட அரசுக்கு தகவல் அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைமுறை படுத்தப்படும்.

கோபி நகரத்திலுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டி.

* வினா எண் 347 : திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி நகரத்திலுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு நீர் உந்து நிலையத்தில் 'ஜெனரேட்டர்' வைப்பதற்கு அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : கோபி செட்டிபாளையம் நகராட்சி பொதுமக்களுக்கு, மின் வினியோகம் தடைப்பட்ட நேரங்களிலும் தொடர்ந்து குடிநீர் வினியோகம்

1981 மார்ச் 3]

செய்ய வகை செய்வதற்கு, தலைமைக் குடிநீர் நிலையத்தில் ஜெனரேட்டர் ஒன்று வாங்கி பொருத்துவதற்கு அனுமதி அளிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் மின் தட்டுப்பாடு காரணமாக ஜெனரேட்டர் வைப்பதற்கு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அதனுடைய மதிப்பீடு என்ன? அதைத் துரிதமாக வைப்பதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஜெனரேட்டர் வாங்குவதற்கான திட்டமிருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநருக்கும், நகராட்சிகள் இயக்குநருக்கும் ஒப்புதலுக்காக இது ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

யானைக்கால் வியாதி.

*வினா எண் 348 : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் யானைச் கால் வியாதி வேகமாகப் பரவி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான தீவிரமான தடுப்புத் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—(அ) மற்றும் (ஆ) சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் தேசிய யானைக் கால் தடுப்புத்திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் யானைக் கால் வியாதி கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் 1973-ல் மைக்ரோ பைலேரியா 8.4 சதவிகிதமாகவும், 1974-ல் 9.5 சதவிகிதமாகவும் இருந்த மைக்ரோ பைலேரியா விகிதம் 1980-ல் 5.3 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. யானைக்கால் நோய் பரப்பும் கொசுக்களை ஒழித்தல், நோய் கண்டவர்களின் இரத்த மாதிரியை எடுத்து சோதனை செய்து அவர்களுக்கு மருந்து கொடுத்தல் தேசிய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகளாகும்.

TAMIL NADU LEGISLATURE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS